**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்**.8/2017

பெயர்–திரு.கோபாலகிருஷ்ணன் நாள்.15.04.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் கரிவரதராஜபெருமாள் மற்றும் வேனுகோபாலசுவாமி திருக்கோவிலில் பரம்பரை அறங்காவலராகவும், பூசாரியாகவும் உள்ளேன் என்றால் சரிதான். எனக்கு முன்பு எனது தந்தை அறங்காவலராகவும், பூசாரியாகவும் இருந்தார் என்றால் சரிதான் அதற்கு முன்பு எனது தாத்தா அழகிரிசாமி அறங்காவலராகவும், பூசாரியாகவும் இருந்தார் என்றால் சரிதான். எனது பெரிய தாத்தா வெங்கட்ஐயர் பரம்பரை பூசாரியாக இருந்தார் என்றால் சரிதான். இன்று வரை வெங்கட் ஐயர் மற்றும் அழகிரிசாமியின் வாரிசுகள் மேற்படி கோவிலில் பூசாரியாக உள்ளேம் என்றால் சரிதான். கடந்த 15.09.1935ம் தேதியில் கேவிலின் பரம்பரை பூசாரிகளாக இருந்த ரங்கையன் மகன் வெங்கட்ஐயன் அவரது தம்பி அழகிரிசாமி, வெங்கட்ஐயரின் மக்கள் ராமய்யன், ரங்கையன் மைனர்,கோபாலகிருணஷ்ணன், அய்யன், மேற்படி அழகிரிசாமி அய்யர் மக்கள் மைனர் துளசிராஜய்யன், மைனர் சௌந்தர்ராஜய்யன் (மைனர்களுக்கு கார்டியன் தகப்பன் அழகிரிசாமி அய்யர்) ஆகியோர்கள் சேர்ந்து ராமசாமி கவுண்டர் மகன் ரங்கசாமி, மசக்கவுண்டர் மகன் மாரப்பகவுண்டர் நஞ்சப்ப கவுண்டர் மகன் வெங்கட்ராமன், ராமசாமி கவுண்டர் மகன் நாராயணசாமி கவுண்டர், ஆறுமுககவுண்டர் மகன் அமராவதி கவுண்டர் ஆகியோர்கள் உள்ளிட்ட 13 நபர்களுக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட டிரஸ்ட் ஒப்பந்தத்தை வா.சா.ஆ.1 எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் வழக்கிற்கு பின்னிட்டு தெரிந்து கொண்டேன். வழக்கு முன்னதாகவே தெரிந்து கொண்டு தற்போது வழக்கிற்கு பின்னிட்டு தெரிந்துகொண்டேன் என பொய்யாக கூறுகிறோன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை வழக்கிற்கு பின்னிட்டு படித்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதில் உள்ள வாசகம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஐந்தாவதாக உள்ள ஆறுமுக கவுண்டர் மககன் அமராவதி கவுண்டர் தான் வாதி அமரனின் தந்தை வழி தாத்தா என்றால் சரிதான்.

1935 வா.சா.ஆ,1 ஆவணப்படி மேற்படி கோயிலின் நிர்வாகத்தையும், பூஜைகளையும் அந்த ஆவணத்தை எழுதி கொடுத்த எனது முன்னோர்கள் தான் பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா மடமான வேட்டுவர் மடத்தை எனது முன்னோர்கள் பராமரித்து வந்தார்கள் என்று கூறப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி வேட்டுவர் மடம் நிர்வாகத்தை பற்றி எனது முன்னோர்கள் செய்து வரவில்லை

என்பதை தெரிந்து கொண்டே வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2வது பக்கத்தில் 11 வது வரியில் 1 முதல் 5 வரை லக்கமிட்ட நபர்களும் மேற்படியார்களின் முன்னோர்களும் கோவிலுக்கு முன்பாக மடம் கட்டி நந்தவனம் முதலானவற்றை நிர்வகித்து வந்தார்கள் என் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அந்த ஆவணத்தை படித்தால் புரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விபரங்களை தெளிவாக தெரிந்து கொண்டே புரியவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே ஆவணத்தில் 2வது பக்கத்தில் 1 முதல் 13 வரை உள்ள பேர்களில் பெரும்பாலும் வேட்டுவர் வம்சத்தார்கள் பரம்பரையாய் முகாமையாய் இருந்து கொண்டு விசேசங்களாகிய மிராசுகளாக இருந்தும் தர்ம்கர்த்தாவாக இருந்து வருகிறீர்கள் என வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.1 டிரஸ்ட் ஆவணம் என்ன காரணத்திற்காக எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணம் படித்தால் எனக்கு புரியவில்லை. வா.சா.1 அமரன் என்பவரை குறுக்கு விசாரணை செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

வேட்டுவர் மடம் கோயிலுக்கு தான் பாத்தியப்பட்டது என காட்டுவதற்கு கோவில் பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்திற்கான சர்வே எண்.349/2 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணப்படி சர்வே எண்,349/2 அரசுக்கு பாத்தியப்பட்டது என காட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை. கோவில் பெயரில் உள்ள ஆவணம் என்னிடம் உள்ளது. தாவா சொத்தான சர்வே எண்,349/2க்கான பட்டா கோவில் பெயரில் இல்லை என்றாலும் அரசு பூமியாக உள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யும் போது Ex.B1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது புஞ்சைபுளியம்பட்டியின் கிராம வரைபடத்தின் 3வது தாள் எனறால் சரிதான். புலவரைபடம் அல்ல என்றாலும் சரிதான். தாவா மடமானது கோவிலுக்கு தென்புறம் 25 முதல் 30 அடி தூரத்தில் உள்ளது. பி.வா.சா.1 வரைபடத்தில் கோவில் மடம் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. அந்த மடம் தற்போது உள்ளதா என்றால் பழைய மடத்தை இடித்து விட்டு புது மடம் அதே இடத்தில் கட்டப்பட்டுள்ளது. பி.வா.சா.1 வரைபடத்தில் நான் சொல்வது போல் கோவிலுக்கு அருகில் மடம் ஏதும் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. **(பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களின் வரிசை எண் மாறுபட்டு இருந்ததால் 26.02.2026 தேதியிட்ட பி.வா.சா.1 குறியீடு செய்த ஆவணங்களின் வரிசை எண். பி.வா.சா.1 முதல் 5 தற்போது பி.வா.சா. 4 முதல் 8 ஆக வரிசை எண் சரிசெய்யப்பட்டுள்ளது)**

ஆ பதிவேடு மற்றும் அடங்கல் ஆவணத்தில் ஒரு புலத்தில் உள்ள கோவில், கிணறு, ரோடு பற்றி குறிப்புகள் என்ற கலத்தில் தான் அதை பற்றி குறிப்பிடுவார்கள் அவ்வாறு குறிப்புகள் இருப்பதாலேயே அந்த இடம் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என கருதமுடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை குறிப்பாக தான் கோவில் காட்டப்பட்டுள்ளது என்றாலும் அதன் உரிமையாளராக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. தற்போது கட்டியுள்ள மடத்திற்கு சொத்து வரி கோவில் பெயரில் உள்ளதா

என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள மடத்திற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. அதன் மின் இணைப்பு எண் எனக்கு தெரியாது. அந்த மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் வாதி அமரன் பெயரில் உள்ளது. மேற்படி மின் இணைப்பு அமரன் நிர்வாகி மற்றும் செயலாளார் என்ற முறையில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா மடத்திற்கு இன்று வரை சொத்து வரியோ மின் இணைப்போ கோவில் சார்பாக நான் செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் 2வது பக்கத்தில் கடைசி இரண்டு வரிகளில் மேற்கண்ட தாங்கள் தர்மகத்தா பாத்தியங்களும், மிராசு பாத்தியங்களுக்கும் கீழ்ப்பட்டும், உடன்பட்டும் நாங்களும் எங்கள் வம்சத்தார்களும் முன்வழக்கப்படியும் இந்த அக்ரிமெண்ட் படியும் நடந்து வர கட்டுப்பட்டு இருக்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அதன் தொடர்ச்சியாக இப்போது நம்மலோடு மேற்கண்ட பாத்தியங்களை ஆட்சேபித்து வந்ததால் இனிமேல் மேற்படி விசயமாக உங்கள் டிரஸ்ட்டில் பாத்தியங்களுக்கு ஆட்சேபனைகளை இருக்கும் பொருட்டும், தெளிவாக தெரியும் பொருட்டும் இந்த உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறோம் என குறிப்பிடப்பட்டிருந்தால் சரிதான். வா.சா.ஆ.1 நகல் என் வசம் உள்ளது. எனது தந்தை துளசிராஜன் 07.10.1980ல் இந்து சமய அறநிலையத்துறை விசாரணையின் போது அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கொடுத்த உத்திரவு வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.14 ஆவணத்தில் எனது தந்தையான பரமபரை அறங்காவலர் துளசிராஜன் 07.10.1980 வாக்குமூலத்தில் விஜயதசமி அன்று இரவு அப்பிச்சிமார்மடம் தலைவர் திருக்கோவிலுக்கு வந்து கோவிலுக்கு முன்புறம் உள்ள வேட்டுவக்கவுண்டர் மடத்தில் தங்கி இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவ்வாறு சாட்சியம் அளிக்கவில்லை. தாவா மடம் வேட்டுவகவுண்டர் மடம் என்பதை தெரிந்து கொண்டே வழக்கிற்காக வேட்டுவகவுண்டர் மடம் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அப்பிச்சிமார்மடம் தலைவர் வேட்டுவக்கவுண்டர் சமூகத்திற்கு தலைவர் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது, அவ்வாறு இருப்பதால் தான் அப்பிச்சிமார்மடம் தலைவருக்கு முதல் மரியாதை கொடுக்கிறோம் என்றால் சரியல்ல. கோவில் திருவிழாவை வேட்டுவ சமுதாய மக்கள் மற்றும் ஒக்கலிக கவுடர் சமூக மக்கள் சேர்ந்து செய்கிறார்கள் என்றால் சரிதான்.

வேட்டுவ சமூக மக்கள் தட்டை பூஜை செய்த பின்பு தான் ஒக்கலிக கவுடர் சமூக மக்கள் பூஜை வருகிறாதா என்றால் தட்டை பூஜை முதலில் ஒக்கலிக கவுடர் சமூகம் தான் செய்கிறர்கள். ஒக்கலிக கவுடர் சமூகத்திற்கும் எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் இரண்டு சமூகத்தாரோடும் எனக்கு பிரச்சினை இல்லை. வழக்கு சொத்தில் உள்ள பழைய மடத்தின் கட்டிடம் இடியும் தருவாயில் 2012ல் இருந்தது. மேற்படி பழைய மடத்தை இடித்து புதியதாக மடம் கட்டியது வாதி அமரன் தலைமையில் ஆன குழு தான் என்றால் சரிதான். மேற்படி மடத்தின் கும்பாபிஷேகம் 24.10.2012ல் நடந்தது என்றால் சரிதான். கும்பாபிஷேகத்திற்கு நான் சென்றேனா என்றால் எனக்கு நியாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நானும் எனது

பெரியப்பா மகன் லோகேஷ் என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **வா.சா.ஆ,17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் இரு புகைப்படங்களில் வாதியும் அவரது மனைவியும் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இரு புகைப்படங்கள் **வா.சா.ஆ,18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகைப்படத்தில் நான் இருக்கிறேனா என்றால் இல்லை. வாதியும் அவரது மனைவியும் பூஜையில் அமர்ந்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் பூஜை செய்வது நான் தான் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 வரிசை புகைப்படங்களில்உள்ளது நான் தான் என்றாலும் தற்போது வழக்கிற்காக நான் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அமரன் தலைமையில் கோயில் மடம் கட்டும்போது முன்னின்று பூஜை செய்து கிரகபிரவேஷம் நடத்திவிட்டு தற்போது வழக்கிற்காக நான் பூஜை செய்யவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,. கிரகபிரவேஷத்திற்கு சென்றிருந்தேன் ஆனால் பூஜை நான் செய்யவில்லை. கிரகபிரவேஷத்தின் பின்பு வாதி அமரன் தான் புதிய மடத்தை நிர்வாகித்து வந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் நான் நிர்வாகம் செய்யவில்லை. புதிய மடத்தின் சொத்து வரி மற்றும் மின் இணைப்பை அமரன் பெயரில் இருந்து கோவில் பெயரில் மாற்றுவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. மடத்தின் கட்டித்தை கட்டும்போது வாதி அமரன் மற்றும் அவரது சமூகத்தை சார்ந்தவர்கள் தான் எல்லா செலவுகளையும் செய்து கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் செலவு செய்யவில்லை என்றால் சரிதான்.

வாதி அமரன் உடன் ஏற்பட்ட விரோதம் காரணமாக தாவா மடம் வேட்டுவ சமுதாய மடம் இல்லை என இந்து சமய அறநிலையத்துறைக்கு பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்து சமய அறநிலையத்துறைக்கு தாவா மடம் பாத்தியப்பட்டது என காட்ட ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. தாவா மடம் வேட்டுவ சமுதாய மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டு அவர்களது நிர்வாகத்தில் உள்ளது என்றால் சரியல்ல. புதியதாக கட்டப்பட்ட மடத்திற்கு மேபுறம் ஒரு சமையல் அறை கட்டுவதற்கு வாதி தலைமையில் நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் எடுத்தார்கள். அதற்கு முன்பு சமையல் அறை கட்டுவதற்கு வரைபடம் கொடுத்து அனுமதி வாங்கியுள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் எனது பிரமாணப்பத்திரத்தில் வேண்டியவர்களை வைத்து கட்டிட அனுமதி பெற்றுள்ளதாகவும் அதில் கூறியிருந்தால் சரிதான். மேற்படி கட்டிட அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் அது பற்றி இந்து சமய அறநிலையத்துறையில் புகார் கொடுத்தேன். 21.09.2016ம் தேதியில வாதியின் ஆட்கள் வழக்கு சொத்தில் கூடுதல் கட்டிடம் கட்ட அஸ்திவாரம் தோண்ட ஆரம்பித்த போது நான் சென்று அதை தடுத்தேனா என்றால் தடுத்தேன். அவ்வாறு வாதியின் கட்டிடம் கட்டுவதை தடுத்ததால் தான் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆ.வ.எண்.175/2000ல் தாவா சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என ஊராட்சி மன்றம் ஒப்புக்கொண்டுள்ளது என

சொல்வது தவறானது என்றாலும் அந்த வழக்கு தாவா மடத்திற்கு சம்மந்தப்பட்டது இல்லை என்றாலும் சரியல்ல. 1935ம் வருடத்திய உடன்படிக்கை ஒப்பந்தப்படி பரம்பரை அறங்காவலர் உரிமை யாருக்கும் கொடுக்கப்படவில்லை என எதன் அடிப்பையில் பிரமாணப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது முன்னோர்கள் சொன்னதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். எனவே, 1935ல் ஆவணத்தை பற்றி எனக்கு வழக்கு முன்னதாகவே நன்கு தெரியும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு வேட்டுவ கவுண்டர் மடத்தின் கூடுதல் கட்டிடம் கட்டுவதை நான் தடுத்ததால் தான் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், இதில் இந்து சமய அறநிலையத்துறை தரப்பினராக இருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. தற்போது தாவா மடத்தை வாதி அமரனின் மறைவிற்கு பிறகு அவரது மகன் இரண்டாம் வாதி நிர்வகித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது,. மேற்படி தாவா மடமானது கோவிலுக்கோ, இந்து சமய அறநிலையத்துறைக்கோ சொந்தமானது இல்லை என்பதால் அதில் கூடுதல் கட்டிடம் கட்டுவதை நான் தடுக்க முடியாது என்றால் சரியல்ல. எனவே, வாதியின் வழக்கை செலவு தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.15 14:41:56 +0530

District Munsif